**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 931/2023 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | ராஜமூர்த்தி |
| Father Name | : | தங்கவேல் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 61 |

**Accused absent. Crpc 317 petition filed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.04.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன்.

2. கடந்த 14.10.2023 ஆம் தேதி வெள்ளகோவில் காவல் நிலைய தலைமைக் காவலர் 818 மாரிமுத்து என்பவர் காங்கேயம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இந்துமதி என்பவரின் அசால்ட் இண்டிமேசனை பெற்று மேல் சிகிச்சைக்காக பரணி மருத்துவமனை சென்றிருந்த தகவல் தெரிந்து அங்கு சென்று இந்துமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னர் 16.10.2023 ஆம் தேதின்று காலை 10.00 மணிக்கு அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலைய குற்ற எண்.387/2023 சட்டப்பிரிவு 294(b), 323 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். **( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3. பின்னர் வழக்கு கோப்புகளை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 16.10.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவ இடம்

சென்று சாட்சிகள் லாரன்ஸ் மற்றும் விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

4. பின்னர் இந்த வழக்கில் சாட்சி இந்து மதி, இளங்கோ, கண்ணன், விஜயகுமாரி, ரவிக்குமார் (எ) ரவிச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியான குணசேகரன் என்பவரை 18.10.2023 ஆம் தேதியன்று வெள்ளகோவில் டவுன் முத்தூர் ரோடு பிரிவு அருகில் வைத்து 13.00 மணிக்கு கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன்.

5. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி இந்துமதி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு வழங்கிய காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் சௌமியா மற்றும் மேல் சிகிச்சை அளித்த பரணி மருத்துவமனை மருத்துவர் இன்னசென்ட் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். **(இந்துமதி என்பவரின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் தலைமைக்காவலர் மாரிமுத்து என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து 28.10.2023 ஆம் தேதியன்று எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவு 294(b), 323 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 14.10.2023 ஆம் தேதி என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பெறப்பட்டது 16.10.2023 ஆம் தேதி என்றால் 15.10.2023 ஆம் தேதியன்று புகார் வாக்குமூலம் பெறப்பட்டது. ஒரு நாள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு

சென்ற விபரம் தெரிந்து அங்கு சென்று விசாரித்ததால் காலதாமதம் ஏற்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் காலம் 3 ல் பி என்ற இடத்தில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.2023 என்று கூறியிருந்தால் அது தவறாகும் என்றால் சரிதான். அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில் MC வழக்கு மற்றும் விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். எந்த வழக்கு என்று குறிப்பிடவில்லை. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் மற்றும் எனது விசாரணையில் சம்பவம் எந்த இடத்தில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 காங்கேயம் மருத்துவமனையில் கொடுத்த விபத்து பதிவேட்டு நகலில் தனது கணவர் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் தொடர்பாக அ.சா.1 யின் தம்பி புகார் கொடுத்து அந்த புகாரின் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட விபரம் எனது விசாரணையில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.17 20:41:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்